

திருவள்ளூர் மாவட்டம் திருமழிசை பேரூராட்சியில் மூலதன மானிய திட்டத்தின் கீழ் ரூ.1.24 கோடி மதிப்பில் புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டு விழா பேரூராட்சி தலைவர் ஜெ.மகாதேவன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி கட்டுமான பணியை தொடங்கி வைத்தனர் உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி, பேரூராட்சி செயல் அலுவலர் ம.வெங்கடேஷ், பேரூர் நிர்வாகிகள் செல்வம், பா.அருள், மு.சுரேந்தர், சண்முகம், இளங்கோவன், க.கங்காதரன், ரேவதி, நாகராஜ், மோகன்ராஜ், கோபு, ஆனந்தராஜ், ராஜா பேரூராட்சி கவுன்சிலர்கள் ரவி , ஜீவா, சதிஷ், பாஸ்கர், வார்டு செயலாளர்கள் டி.கே.வேலு, வெங்கடேசன், தென்னரசு, ஹரிகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்கள்



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (27.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டம் இடையக்கோட்டையில்

# திருக்கோயிலுக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலப்பரப்பில் 6,500 மரக்கன்றுகள் நடும் பணி!

### அமைச்சர்கள் அர.சக்கரபாணி – பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்!

திண்டுக்கல், ஜன.28-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி, மாண்பு மிகு உணவு மற்றும் உண வுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், இடையக் கோட்டை, திருவேங்கட நாத சுவாமி திருக்கோயி லுக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலப்பரப்பில் நேற்று (27.01.2025) பாரத ஸ்டேட் வங்கியின் பெருநிறுவன சமுதாய பொறுப்பு நிதியின் (CSR Fund) மூலம் மரக்கன்று நடும் நிகழ்வினை தொடங்கி வைத்தனர்.

முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்றபின் 804 ஏக்கரில் மரம் நடுவ தற்கு இந்து சமய அறநிலை யத்துறை அனுமதி தந்துள் ளது. மேலும், திருக்கோயில்கள் சார்பில் தொடங்கப்பட்ட கல்லூரிக ளில் பழனி தண்டாயுத பாணி திருக்கோயில் சார் பில் ஒரு மகளிர் கல்லூரியை ஒட்டன்சத்திரத்தில் அமைத்து கொடுத்தார்கள். அந்த கல்லூரிக்கு சொந்த கட்டடம் கட்ட ரூ.25 கோடி நிதி ஒதுக்கி தந்துள் ளார்கள். அதற்கு விரைவில் அடிக்கல் நாட்டப்படும். பழனி திருக்கோயில் நிர்வா கத்தின் மூலம் நடத்தப்ப டும் பள்ளி மற்றும் கல்லூரிக ளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற் றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் செயல்ப டுத்தப்பட்டுள்ளது. அதே போல் புதுமைப்பெண் திட் டத்தின் மூலம் பெண்களின் கல்வி வளர்ச்சி 34 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இப்படி எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொற்கால ஆட்சியை நடத் திக் கொண்டிருக்கின்றார் கள். எல்லோருக்கும் எல் லாம் என்ற தாரக மந்திரத்தோடு அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட வேண்டுமென் றும், மக்கள் அனைவரும் வளம் பெற வேண்டும் என் பதற்காகவும் முதல்வர் அவர்கள் அயராது உழைத்து கொண்டிருக்கி றார்.

திருக்கோயில்களுக்கு சொந்தமான இடங்களில் வளர்க்கப்படும் மரங்களி னால் எதிர்காலத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு மிகப்பெரிய வருமானம் கிடைக்கும். அதுமட்டு மின்றி சுற்றுச்சூழல் பாது காக்கப்படுவதோடு நல்ல மழை பொழிந்து விவசாயிகளும், பொதுமக்க ளும் பயன் பெறுவார்கள். அதற்காகத்தான் மரக்கன்று கள் நடும் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டி ருக்கிறோம். இந்த திட்டத்திற்கு உறுதுணை யாக இருந்த அனைவருக் கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது:

அந்த காலத்தில் செல்வந் தர்கள் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு கட் டிடங்களை கட்டி வழங்கி னார்கள். தங்களது சந்ததியி னருக்கு இக்கட்டிடம் என்னால் கட்டப்பட்டது என்று பெருமையோடு கூறு வார்கள். ஆனால் இந்த காலத்தில் வசதி வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிட் டாலும், அமைச்சர் பெரு மக்கள், நாடாளுமன்ற, சட் டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலை வர் போன்றவர்கள் அரசு திட்டங்களை கொண்டு வந்து அந்த பகுதியில் தங் கள் நிலையினை நிலைநிறுத்த கூடும். செல் வந்தர்களாக இல்லாதவர் கள் கூட தங்களை நினைவு கூற வேண்டும் என்று கட்டு கின்ற கட்டிடங்களுக்கு கூட 50 ஆண்டுகள் தான் ஆயுட்காலம். ஆனால் நீங் கள் ஒரு மரத்தை நட்டு வளர்த்தால் அது இரண்டு சந்ததியினருக்கு அதாவது நூறாண்டுகளை கடந்து இந்த மரம் எங்கள் தகப்ப னார், பாட்டனார் நட்டது என்று பெருமையோடு கூறும் வரலாறு உருவாகும். ஒரு மரத்துக்கே இப்படி வர லாறு என்றால் இன்றைக்கு லட்சக்கணக்கான மரக்கன் றுகளை நட்டு அழியா புக ழைத் தேடிக் கொண்டிருக் கின்ற அமைச்சர் சக்கரபாணி நீண்ட ஆயு ளோடு வாழ வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

விடாமுயற்சிக்கு சொந் தக்காரரான அவர் கடந்த காலங்களில் எதிர்கட்சி கொறடாவாக இருந்த போது அவரது தொகுதிக்கு பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவமனை, சாலைகள், பாலங்கள் என கோரிக்கை களை வைத்துக் கொண்டே இருப்பார். ஒருமுறை அன்பு தலைவர் தளபதி அவர்களே, நீங்கள் ஒட்டன் சத்திரம் தொகுதிக்கு மட் டும் சட்டமன்ற உறுப்பினர் அல்ல, திராவிட முன் னேற்ற கழகத்தின் சட்ட மன்ற கொறடா என்று கூறி னார். அந்த அளவிற்கு தன்னை தேர்ந்தெடுத்த மக் களுக்கு எந்நாளும் உழைத் திட வேண்டும் என்று முதன்மையான சட்டமன்ற உறுப்பினராக அண்ணன் சக்கரபாணி அவர்கள் திகழ் கின்றார் என்றால் அது மிகையாகாது.

சிலர் நூறு ரூபாய் அள விற்கு உதவி செய்தாலே அதற்கு விளம்பரம் தேடு வார்கள். சென்னையில் சாலைகள் மற்றும் கால் வாய் ஓரங்களில் வசிக்கும் மக்களுக்கு உணவு பொருட் களை வழங்க வேண்டும் என்று அவரிடம் கோரி னால் எண்ணிக்கையை மட் டும் தான் கேட்பார். அள் ளிக் கொடுக்கின்ற மனம் படைத்த அவரை மரக்கன் றுகளை நடுகின்ற அமைச் சர் என்று சேர்த்தே அழைக் கலாம். அவருடைய செயல்களால் இந்து சமய அறநிலையத்துறைக்கும் பாராட்டு கிடைக்கிறது. இப்படி மரம் வளர்ப்பதற் காக எந்த சட்டமன்ற உறுப் பினரும் எங்களை அணுக வில்லை. 276 ஏக்கர் நிலத்தினை மரங்கள் நடுவ தற்காக சட்டப் போராட் டமே நடத்தி அதிலும் வெற்றி கண்டு இந்த பகுதி யினுடைய வளத்திற்கும், வாழ்வாதாரத்திற்கும் துணையாக இருக்கின்ற அவரை எவ்வளவு பாராட் டினாலும் தகும்.

276 ஏக்கரோடு நின்று விடுமா என்று பார்த்தால் அவர் கூடுதலாக 327 ஏக்கர் நிலப்பரப்பை மரக்கன்று கள் நடுவதற்காக கேட்டி ருக்கிறார். முதலமைச்சர் அவர்களின் உத்தரவினை பெற்று, அவர் கோரிய இடங்கள் மரங்களை நடுவ தற்காக வழங்கப்படும். அந்த விழாவிற்கு நானும் வருவேன் என்பதை தெரி வித்துக் கொண்டு நல்ல உள் ளம் படைத்த அவர் பல் லாண்டு, நோய் நொடி இல்லாமல் எல்லா வளமும் நலமும் பெற்று நம் உயிரி னும் மேலான அன்பு தலை வர் தமிழகத்தின் முதல மைச்சர் தளபதி அவர்களின் கரங்களுக்கு வலு சேர்ப் பார், அவரின் புகழுக்கு புகழ் சேர்ப்பார் என்று தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில் திண்டுக் கல் நாடாளுமன்ற உறுப்பி னர் ஆர்.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், திண்டுக்கல் மாவட்ட ஆட் சித் தலைவர் திருமதி மொ. நா. பூங்கொடி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், பழனி சார் ஆட்சி யர் சீ. கிஷன்குமார், மாவட்ட வன அலுவலர் பு.மு.ராஜ்குமார், பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை பொது மேலாளர் பர்மிந்தர் சிங், பொது மேலாளர் ஜொ.ஸ்ரீநிவாச ராவ், இணை ஆணையர் கள் எம்.கார்த்திக், எஸ். மாரிமுத்து, கிராமியம் டிரஸ்ட் நாராயணன், கூடு டிரஸ்ட் ஜெயதீனன் மற் றும் அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் – கழக அரசின் சாதனைக்கும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் தரும் பிறந்தநாள் பரிசாக அமையும்!

### தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, ஜன.28-

அரசு ஊழியர்கள், ஆசிரி யர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அரு ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

2019 ஆம் ஆண்டு நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் மகத் தான வெற்றி தந்தார்கள் அதாவது புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளில் 39 தொகு திகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கூட்டணி அமோக வெற்றிபெற்று சாதனை படைத்தது. அப் போது தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து தெரித்தோம். அப்போ தைய எதிர்கட்சித் தலைவ லவ ரும் தற்போதைய முதல மைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களி டம் இந்த மாபெரும் வெற்றி அடுத்து தமிழ் நாட்டை தாங்கள் தான் ஆளவேண்டும் என மக்கள் ஒட்டுமொத்தமாக வாக்க ளித்துள்ளார்கள் என தெரி வித்தேன். அப்போது சிரித் துக் கொண்டே கைகொ டுத்து முதுகில் தட்டினார் என்பதை மன நெகிழ்ச் யோடு நினைவுபடுத்தி பெருமைக் கொள்கிறேன்.

அதேபோன்று 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்த லில் மாபெரும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார். அதோடு தேர்தல் அறிக்கை யில் இடம்பெற்ற மகளிர் உரிமைத் தொகை ரூ. 1000/ மகளிர் பேருந்துகளில் இல வசமாக பயணம் செய்ய விடியல் பயணம் திட்டம், விவசாய கடன் ரத்து, கூட் டறவு கடன் ரத்து, மாண வர்களுக்கான நான் முதல் வன், கல்லூரி கனவு, இல் லம்தேடி கல்வி, முதல்வ ரின் காலை உணவு திட்டம் அரசு ஊழியர்கள் ஆசிரியர் களுக்கான அ.தி.மு.க. ஆட் சியில் நிறுத்தப்பட்ட அகவி லைப்படி உயர்வு மீண்டும் வழங்கியது உள்ளிட்ட வாக் குறுதிகளை மூன்றே ஆண்டு களில் நிறைவேற்றியதால் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற் றுள்ளார் என்பது தற்போ தைய நாடாளுமன் றத் தேர் தலில் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்பதை பறைசாற்றும் வித மாக மக்கள் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள் மற் றும் புதுச்சேரி ஒரு தொகுதி என 40க்கு 40 தொகுதிகளில் மாபெரும் வெற்றியை முத் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 100 ஆண்டு நிறை விழா பரிசாக வழங்கியுள்ளனர்.

அதேபோன்று நான்கு ஆண்டு சாதனையை அங்கி கரிக்கின்ற விதமாக பிப்பர வரி 5ம் தேதி நடைபெறவி ருக்கின்ற ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் சந்தி ரகுமார் அவர்களின் வெற்றி இந்தியாவின் முதன்மை முத லமைச்சர் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளுக்கு மக்கள் தரும் பிறந்தாள் பரி சாக அமையும் என்பதில் சந் தேகமில்லை.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.




தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் மற்றும் இணைப்புச் சங்க நிர்வாகிகளின் கூட்டம் நேற்று (27.01.2025) காலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை அலுவலகமான "கலைஞரகத்தில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையிலும், பொதுச் செயலாளர் டி.பு.சி.எஸ்.பத்மநாபன் வரவேற்பிலும் மாநிலப் பொருளாளர் பொன்னி, இரா.பழனியப்பன், மாநில துணைத் தலைவர் டாக்டர் சிந்தாமணி இரா.இராஜன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு. சண்முகம் எம்.பி., தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கோ.சி. வள்ளுவன், பேரவை துணைத் தலைவர் இரா.பொன்னுராம், அலுவலகச் செயலாளர் ஆ.சீ. அருணகிரி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்கடசாலைகள் தொ.மு.ச.நிர்வாகிகள் TUCS இராஜன் சாமிநாதன், திருவாரூர் டி.காளிதாஸ், மதுரை ஆர்.பாண்டியன் மணி, சேலம் பொன்னி சதீஷ்குமார், வேலூர் மாவட்டம் எம்.ஏழுமலை, திருவண்ணாமலை பாண்டியன், காஞ்சிபுரம் க. செல்வமணி, திருவள்ளூர் ஜோதி, திருச்சி சிந்தாமணி இராஜேந்திரன், பொள்ளாச்சி இரத்தினசாமி, சிவகங்கை கூநாகராசன், திருநெல்வேலி முத்தையா, திண்டுக்கல் அபிராமி சி.மனோகரன், சென்னை சிந்தாமணி ஜெ.அலிசன், கும்பகோணம் சந்திரசேகரபுரம் ஆர்.கோபிநாத், தஞ்சாவூர் ஏ.விஸ்வநாதன், ஈரோடு எம்.சங்கரன், கரூர் ஆர்.குமார் மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி திருவள்ளூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட காக்களூர் ஊராட்சியில் 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணியும் புட்லூர் ஊராட்சியில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புட்லூர் மேம்பால முதல் அரண்வாயில் மேம்பால வரை சாலை விரிவாக்கம் பணிகளை பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அருகில் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ் உள்பட அரசு அதிகாரிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் ஊராட்சி கிளை கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை தெற்கு மாவட்டத்தில்

# முரசொலி வாசகர் வட்ட அமைப்பாளர் நியமனம்!

### மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கின் மேல்தளத்தில் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களால் 2-1-2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள 'முரசொலி வாசகர் வட்டத்தின்' அமைப்பாளராக செயல்பட எண்.3/324, 4வது தெரு, குமரகுரு அவென்யூ, நீலாங்கரை, சென்னை என்ற முகவரியில் வசிக்கும் ஓ.சுந்தரம், எம்.ஏ., பி.எல்., (9087979431) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கழகத் தோழர்கள், இளைஞர்கள் இயக்கத்தின் கொள்கைக் கோட்பாடுகள் குறித்து அறிந்து தெளிந்திட, முரசொலி செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்க, முரசொலி வாசகர் வட்டத்தினை ஒரு பாசறையாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

## மதுரை தெற்கு மாவட்டம் – அவனியாபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர்

# வழக்கறிஞர் மணிசேகரன் மறைவு!

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் – கழகத்தினர் இரங்கல்!



மதுரை, ஜன.27-

மதுரை தெற்கு மாவட் டம் அவனியாபுரம் கிழக்கு பகுதி கழக செயலாளரும், வழக்கறிஞருமான மணிசே கரன் வயது (54) மாரடைப் பால் இயற்கை எய்தினார். அன்னாரின் மறைவு செய்தி யறிந்து மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேட பட்டி மு.மணிமாறன் நேரில் அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்தார்.

அதன் விவரம்:

மதுரை தெற்கு மாவட் டம் அவனியாபுரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளராக சிறப்பாக பணியாற்றி வந்த வழக்கறிஞர் மணிசேகரன் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

இவர் மாணவர் பருவம் முதல் கழகத்திற்காக தீவிர மாக பல போராட்டங்கள் பங்கேற்று மதுரை தெற்கு மாவட்டம், திருப்பரங் குன்றம் தொகுதிக்குட்பட்ட திருப்பரங்குன்றம் ஒன்றியத் தில் கிளைக் கழகங்களில் பணியாற்றி, மாநகராட்சி யாக மாற்றப்பட்ட போது, அவனியாபுரம் கிழக்கு பகுதி கழகத்தில் 87வது வட்டக் கழக செயலாளராக பணி யாற்றி, தற்போது அவனியா புரம் கிழக்கு பகுதி கழக செயலாளராகவும் சிறப்பாக கழக பணியாற்றி வந்தார்.

அன்னாரின் மறைவு அப் பகுதி மக்கள் மத்தியிலும், கழகத்தினர் மத்தியிலும் மிகுந்த சோகத்தை ஏற்படுத் தியுள்ளது. இவருக்கு வனிதா என்ற மனைவியும் ஜெகன் மற்றும் மெல்லினா, இனிஷா, ஆஷா என்ற மகள் களும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு துய ரச் செய்தி அறிந்த தெற்கு மாவட்ட செயலாளர் சேட பட்டி மு.மணிமாறன் மற் றும் கழக நிர்வாகிகள், கழ கத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தனர். மேலும் அப் பகுதி பொது மக்களும், வியாபாரிகளும், வழக்கறி ஞர்களும் மணிசேகரனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.01.2025) காலை நடைப்பயிற்சியின் போது சைதாப்பேட்டை CIT நகர் பகுதியை சேர்ந்த தியாகராஜன் கலைவாணி தம்பதியரின் மகன் விஷ்ரூத் என்ற 5 வயது சிறுவன் மயங்கி விழுந்த நிலையில் அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, அவரின் வாகனத்திலேயே சென்னை, எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு ABlock அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிறுவனை பரிசோதனை செய்ததில் ஏற்கனவே இருதய நோய் (VSD) பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டு, உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, சிறுவன் தற்போது நலமுடன் உள்ளார். பெற்றோரிடம் சிறுவனின் தற்போதைய நிலைமை எடுத்துரைக்கப்பட்டு உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.




தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4 லில் உள்ள மண்டல அலுவலகத்தில் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தேசிய கொடியை ஏற்றி வைத்தும் அண்ணல் காந்தி அடிகளின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி வணங்கி மரியாதை செலுத்தினார். உடன் 4வது மண்டலத்திற்கு உட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.சேகர், டி.ஆர்.கோபி, பி.புகழேந்தி, எல்.பெரியநாயகம், ஹேமாவதி சேகர், மதுமிதாமதன், ராஜேஸ்வரி சங்கர் மற்றும் முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் இரா.செல்வகுமார், இரா.ரத்தினகுமார், ஜெபதுரை, சேதுமாதவன், எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிகுமார், ஆர்.செல்வகுமார், எஸ்.கார்த்திக். பி.காளியப்பன், மங்களபுரம் எம்.பாபு, ஆர்.சஞ்சீவி, ஆர். ஆகஸ்டின், எ.முனுசாமி, எம்.சூரியா, வட்டர் பி.மோகன், விக்கி என்கிற யுவராஜ், சித்திரம் வாசுதேவன், கடப்பேரி ராஜா, எம்.தாஸ், அன்பழகன், இ.நவீன்குமார், துரைராஜ், டி.தேவா, ஹாரிஸ், நலச்சங்க நிர்வாகிகள் கழகத் தோழர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.